**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | திரு. செந்தில்குமார் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **22.12.2021**

முதல் விசாரணை :

நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் மதுரையில் குடியிருந்தேன். அந்த சமயத்தில் நான் ஜெராக்ஸ் மிசின் Sales and Services செய்து வந்தேன். ஆஜர் எதிரியை பார்த்திருக்கிறேன். அவரது வீட்டிற்கு அப்பப்போ போய்ட்டு வருவேன். எனது நண்பர் என்ற முறையில் அவரது வீட்டிற்கு சென்று சந்தித்து வருவேன். அசா1 வெங்கடேசன் எனது நண்பர். பல வருடங்களாக எனக்கு அவரைத் தெரியும். எனது வேலைக்காக அவரது வீட்டிற்கு அடிக்கடி போய் வருவது உண்டு. அப்படி போய்ட்டு வரும்போது, விஸ்வநாதன், முத்துக்குமார் ஆகியோரை அவரது வீட்டில் வைத்து இரண்டு முறை பார்த்துள்ளேன். அசா1 ன் மனைவி கௌரிக்கு அவர்கள் இருவரும் வந்து போவது பிடிக்காமல் இருந்தது. ஒருமுறை சம்பவத்திற்கு 4,5 நாட்களுக்கு முன்பு அசா1 வெங்கடேசன் வீட்டிற்கு நான் வேலை சம்பந்தமாக போயிருந்த போது அசா1 எதிரிகளைத் திட்டிக்கொண்டிருந்தார். 1 வது எதிரி தனது நண்பரான 2 வது எதிரியை வீட்டிற்கு கூட்டிக்கொண்டு வருவது பிடிக்கவில்லை என்று அசா1 ன் மனைவி தனது கணவரிடம் complaint செய்து அதன்

அடிப்படையில் 1 வது எதிரியைத் திட்டிக்கொண்டிருந்தார். ஏன் திட்டுகிறாய் என்று அசா1 ஐ நான் கேட்டதற்கு அவர் சில விபரங்களைச் சொன்னார், எனது மனைவி இருக்கும் போது அவர்கள் வந்து போகிறார்கள், அது எனக்குப் பிடிக்கவில்லை, நீங்கள் அவர்களிடம் சொல்லுங்கள், வருவதற்கு முன்பு போன் செய்துவிட்டு வருமாறு சொல்லுங்கள் என்று சொன்னார். 31.07.2015 அன்று சம்பவம் நடைபெற்றது. அன்றைய தினம் மதியம் 02.00 மணிக்கு மதுரை பைபாசில் சந்தித்து ஊரில் வீடு கட்ட வேண்டும், அதற்காக plan ready செய்து தரவேண்டும் என்று நான் சொன்னேன். அதற்கு அசா1 அன்று மாலை செய்து தருவதாக சொன்னார். அது தொடர்பாக Clarification க்காக 4.15 மணிக்கு போன் செய்தேன். அப்போது அசா1 போனில் அழுதுகொண்டே பேசினார். இரத்த வெள்ளத்தில் எனது மனைவி இருக்கிறார் யாரோ என்னமோ செய்துவிட்டார்கள், சீக்கிரம் கிளம்பி வா, மருத்துவமனை அழைத்து செல்ல வேண்டும் என்று சொன்னார். நான் எனது வண்டியை எடுத்துக்கொண்டு அசா1 வீட்டிற்கு சென்றேன். அசா1 ன் வீடு மாடியில் உள்ளது. நான் மாடிக்கு ஓடினேன். அப்போது வெங்கடேசனும், பக்கத்து வீட்டு 2 பெண்களும் சேர்ந்து கௌரியைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். நான் அவர்களுக்கு கீழே இறக்க உதவி செய்து, கீழே பக்கத்து வீட்டில் Drop செய்ய வந்த ஒரு வாடகைக்காரில், கௌரியை ஏற்றி நான் காரின் முன்பக்கம் அமர்ந்து கொண்டேன். பின் பக்கம், கௌரியும் வெங்கடேசனும் இருந்தார்கள். அங்கிருந்து, அரிஸ்டோ மருத்துவமனைக்கு சென்றோம். செல்லும் வழியில் தாடைக்கு கீழ் பகுதியில் காயம் இருப்பதை பார்த்து வெங்கடேசன் என்னிடம் சொன்னார். அரிஸ்டோ மருத்துவமனையில் கொண்டு சென்ற போது, மருத்துவமனை வெளியில் செவிலியர்கள் மற்றும் மருத்துவர்கள் வந்து கௌரியை சோதித்து பார்த்தார்கள். ஆனால் அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். உடனே GH க்கு கொண்டுபோகச் சொல்லி அறிவுறுத்தினார்கள், நாங்கள் செய்வது அறியாது திகைத்து, அவரது தந்தைக்கு வெங்கடேசன் தகவல் சொன்னார். பின்னர் அங்கிருந்து சில நேரத்தில் GH க்கு சென்றோம். அங்கே அருகில் காரை நிறுத்தி விட்டு, கௌரியின் தந்தையும் மற்ற உறவினர்களும் வரும் வரை காத்திருந்தோம்.

சுமார் 07.00 மணி போல் அவர்கள் வந்தார்கள். அவர்கள் வந்தவுடன் போலிஸ் நிலையத்தில் சென்று புகார் கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்து, போலிஸ் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். கௌரி அணிந்திருந்த நகை, தாலி செயின் ஆகியவை காணமல் போயிருந்ததை அப்போது தான் கவனித்தோம். பின்னர் போலிசார் என்னையும் விசாரித்தார்கள். நான் நடந்தவற்றை கூறினேன்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

போலிஸ் விசாரணையின் போது நான் அசா1 வீட்டிற்கு 4,5 நாட்களுக்கு முன்பு சென்றபோது எதிரிகளைப் பார்த்த விபரத்தை சொன்னேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. 31.07.2015 அன்று மதியம், அசா1 ஐ பைபாசில் plan approval சம்பந்தமாக சந்தித்தாக போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலிஸ்விசாரணையில் காரில் இருந்த கௌரிக்கு காயம் இருந்த விபரத்தை சொன்னேனா என்றால் நான் பார்க்கவில்லை அசா1 பார்த்துவிட்டு என்னிடம் சொன்னார். மதுரைக்கு வந்ததில் இருந்து அசா1 ம் நானும் நண்பர்கள் என்றால் சரிதான். வெங்கடேசனுக்கு தொழில் ரீதியாக பண பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. பண பிரச்சனையால் அசா1 பலரிடம் கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல, வாங்கியிருந்தால் என்னிடம் சொல்லியிருப்பார். பணப்பிரச்சனை சம்பந்தமாக அசா1 க்கும் அவரது மனைவிக்கும் அடிக்கடி சண்டை நடக்கும் என்றால் பணப்பிரச்சனையே இல்லை பின்னர் எப்படி சண்டை வரும். எனது மனைவி சம்பவ சமயத்தில் சென்னையில் இருந்தார். அதனால் நான் வெங்கடேசனுடன் நீண்ட நேரம் செலவழிப்பேன் என்றால் சரியல்ல. அடிக்கடி பார்த்தால் 10 நிமிடம், 1/4 மணி நேரம் பேசுவோம். நண்பர் என்ற முறையில் அசா1 வீட்டிற்கு மாதத்திற்கு 2 முறை செல்வேன். அவ்வாறு போகும் போது நண்பர் முறையில் கௌரி என்னிடம் நல்ல முறையில் பேசுவார் என்றால் சரிதான். நானும், கௌரியும் நல்ல முறையில் பேசுவதால் அசா1 க்கு எங்கள்மீது சந்தேகம் இருந்தது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு நான் எனது இரு சக்கர வாகனத்தில் வந்தேன். வாடகைக்

கார் யாருடையது என்றால் பக்கத்து வீட்டிற்கு வாடகைக்கு வந்த கார் ஆகும். அந்த காரின் எண் எனக்குத் தெரியாது. நாங்கள் அரிஸ்டோ மருத்துவனை சென்றபோது மணி சுமார் 04.25 , 04.30 மணி இருக்கும். அரிஸ்டோ மருத்துவமனையில் நாங்கள் சுமார் 20, 25 நிமிடங்கள் இருந்தோம். மருத்துவர்கள் பரிசோதனை செய்யும் வரை அங்கு இருந்தோம். அரிஸ்டோ மருத்துவமனையில் பரிசோதனைக்கு முன்பு ஏதேனும் பதிவேட்டில் entry செய்தார்களா என்றால் அது பற்றி தெரியாது, வெளியில் வைத்தே பரிசோதனை செய்தார்கள். அரிஸ்டோ மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10, 15 நிமிடத்தில் போய்விடும் தூரம் போய்விடலாம். விசாரணை சமயத்தில் காவல்நிலையத்திற்கு சென்று இருந்தேன். அந்த சமயத்தில் கௌரி கொலை செய்யப்பட்டார் என்று புகார் கொடுக்க போகவில்லையா என்றால் பதட்டத்தில் இருந்ததால் தோனவில்லை. அவசர போலிஸ் 100 க்கு பேசவில்லை. அரிஸ்டோ மருத்துவமனையில் பரிசோதனை செய்த பிறகு நாங்கள் என்ன செய்தோம் என்றால் அசா1 அழுது கொண்டு இருந்தார், அங்கிருந்து அசா1 கௌரியின் அப்பாவிற்கு போன் செய்து தகவல் சொல்லி உடனே வரச்சொன்னார். அரிஸ்டோ மருத்துவமனையில் இருந்து GH சென்ற போது எத்தனை மணி இருக்கும் என்றால் சரியாக ஞாபகம் இல்லை சுமார் 5.15, 5.30 மணி இருக்கும். அரசு மருத்துவமனையில் கௌரியைச் சேர்க்க முயற்சி செய்தீர்களா என்றால் ஒரே கூட்டமாக இருந்தது, கௌரி இறந்துவிட்டதாக சொன்னதால் அவரது அம்மா, அப்பா வருவதற்காக காத்திருந்தோம். கௌரியின் பிரேதத்தை நானும் அசா1 ம் 4 1/2 மணி நேரம் எங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம். கொலையுண்டு இறந்து போன ஒரு பிரேதத்தை எங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது தவறு என்று எனக்கு அப்போது தெரியவில்லை. நான் 02.00 மணிக்கு வெங்கடேசனை வழியில் தான் சந்தித்தேன். அசா1 ஐ பைபாஸ் ரோட்டில் பார்த்தேன். பொன்மேனி இறக்கத்தில் பார்த்தேன். முத்துக்குமாரை எனக்குத் தெரியுமா என்றால் அசா1 வீட்டிற்கு சென்றபோது பார்த்துள்ளேன். முத்துக்குமார் என்பவர் அசா1 இடம் வேலை பார்த்த கொத்தனார் என்றால் எனக்குத் தெரியாது. அசா1 க்கும்

முத்துக்குமாருக்கும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் வாய்ப்பு இல்லை., எனக்குத் தெரியாது. நான், வெங்கடேசன், முத்துக்குமார் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து தான் கௌரியை கொலை செய்து விட்டு, தடையத்தை அழிப்பதற்காக 4 1/2 மணி நேரம் பிரேதத்தை எங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம் என்றால் சரியல்ல. வெங்கடேசனின் உறவினர்கள் சுமார் 07.00, 07.15 மணிக்கு அரசு மருத்துவனை வந்தார்கள். அவர்கள் வந்த பிறகும் அரசு மருத்துவமனையில் சேர்க்க முயற்சிக்கவில்லை. காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு அசா1 சென்றார் என்றால் சுமார் 08.00 மணிக்கு சென்றார். வெங்கடேசனை யார் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றால் அவரது அப்பாவும் உறவினர்களும் போனார்கள். வெங்கடேசன் காவல்நிலையம் சென்ற போது நான் எங்கு இருந்தேன் என்றால் அரசு மருத்துவமனையில் இருந்தேன். எங்கள் நண்பர்கள் யார் யார் அரசு மருத்துவமனை வந்தார்கள் என்றால், பிரவீன் குமார் மற்றும் 2 நண்பர்கள் வந்தார்கள். (சாட்சி நண்பர்கள் யார் என்றால் யோதித்துக்கொண்டு இருக்கிறார்.)., கௌரி வீட்டிற்கு TV Mechanic யாரும் வந்தார்கள் என்ற விபரத்தை அசா1 என்னிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. TV ரிப்பேர் என்று மட்டும் தான் சொன்னார். இந்த வழக்கு சம்பந்தமாக வெங்கடேசனை கைது செய்தது பற்றி செய்து தாளில் வந்ததா என்றால் இல்லை, தெரியாது. காவல்நிலையத்தில் வெங்கடேசனை சந்தித்தேன். வெங்கடேசனை நான் காவல்நிலையத்தில் சந்தித்த போது சுமார் 10.00, 10.15 மணி இருக்கும். வெங்கடேசனை நான் பார்த்தபோது வெங்கடேசன் காவல் நிலையத்திற்கு உள்ளே தான் இருந்தார். நான் காவல்நிலையம் சென்றபோது எத்தனை காவலர்கள் இருந்தார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள், எண்ணிக்கை தெரியவில்லை. வெங்கடேசனை சந்திக்க என்னை காவலர்கள் அனுமதித்தார்களா என்றால் முதலில் அனுமதிக்கவில்லை, விசாரித்துக்கொண்டிருந்தார்கள். வெங்கடேசனை எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் எத்தனை மணிக்கு சந்தித்தேன் என்று ஞாபகம் இல்லை. தோராயமாக மூன்று மணி முதல் நான்கு மணி நேரம் கழித்து பார்த்திருப்பேனா என்றால் எனக்கு சரியாக

நேரம் தெரியவில்லை. காவல்நிலையத்தில் நான் மூன்று மணி நேரம் இருந்தேன். மூன்று நேரத்திற்கு பிறகு தான் நான் வெங்கடேசனை சந்தித்தேன் என்றால் மூன்று மணி நேரத்திற்குள் சந்தித்தேன். இறந்து போனது வெங்கடேசனின் மனைவி., நான் ஏன் பதட்டமாக இருந்தேன் என்றால் நண்பர் மனைவி என்பதால் அவர் பதட்டமாக இருந்தார், அதனால் நான் பதற்றமாக இருந்தேன். எனக்கும் கௌரிக்கும் தொடர்பு இருந்தது என்றும், அதனை அசா1 காவல்நிலையத்தில் சொல்லிவிட்டார் என்றும் அதனால் தான் பதற்றமாக இருந்தேன் என்றால் சரியல்ல. நகைக்காக கௌரியை கொலை செய்துவிட்டதாக வெங்கடேசன் என்னிடம் காவல்நிலையத்தில் வைத்து சொன்னார். காவல்நிலையத்தில் சுமார் 10 நிமிடங்கள் நான் வெங்கடேசனிடம் பேசினேன். வெங்கடேசன் காரில் செல்லும்போது என்னிடம் கத்திக்குத்து காயம் இருந்ததாக சொன்னார் என்றால் காயம் இருந்ததாக சொன்னார். எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் இல்லை. உண்மையில் எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றும், நானும் அசா1ம் Bar Mate என்றால் சரியல்ல. எனக்கும் கௌரிக்கும் இடையே தொடர்பு இருந்ததால் தான் எனது மனைவி கோவித்துக்கொண்டு சென்னையில் இருந்தார் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எனது மனைவி சென்னையில் இருந்தார். உண்மையிலேயே எனது மனைவி என்னிடம் சந்தேகம் கொண்டு கோவித்துக்கொண்டு சென்னை சென்றார் என்றால் சரியல்ல. உண்மையாக எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அசா1 எனது நண்பர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை